# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093603

1. District மாவட்டம் : DVAC  PS: காவல்நிலையம் V&AC HQRS  Year: ஆண்டு 2019  FIR No.: மு.த.அ. எண் 20  Date: நாள் 11.10.2019

2. (i) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Prevention of Corruption  Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை → In October 2019
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை → Surprise check conducted between 1845hrs to 2230hrs on 10.10.19
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.10.2019  Time : நேரம் 1500hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.10.2019  Time : நேரம் 1600hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  North West 25 kms
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி  Office of the Special Thasildhar Town Survey and Settlement Office Old Municipality office, N.H. Road Chennai-54.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt.S. Judy Abigail  (b) Father's/ ~~Husband's Name~~ : தந்தை / கணவர் பெயர் A.K. Samuel
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Inspector of Police  (g) Address : முகவரி Directorate of Vigilance & Anti Corruption NO: 293, M.K.N. Road Alandur, Chennai - 16.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. V. Sridharan, Special Thasildar, Town Survey and Settlement, Aradi Taluk, Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Unaccounted Cash Rs 89,060/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR contents is enclosed in a seperate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Judy Abigail Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
Judy 11/10/2019

Despatched on 11/10/19.
15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Judy Abigail
Rank: நிலை Inspector of Police No. எண் SIC, DVAC, Chennai

INSPECTOR OF POLICE,
Special Investigation Cell,
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.20/2019 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு

நான் 10.10.2019 அன்று மாலை சுமார் 3 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் உள்ள நகர நில வரித்திட்ட அலுவலகத்தில் பணியாற்றும் தனி வட்டாட்சியர் திரு.ஸ்ரீதரன், சர்வேயர்கள் மற்றும் இதர அலுவலர்கள் அந்த அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு உரிய அரசுப்பணியை செய்து தர கையூட்டு பெறுவதாக நம்பகமான தகவல் கிடைத்தது. எனது அலுவலகத்திற்கு கிடைத்த தகவலை அன்று (10.10.2019ந் தேதி) மாலை சுமார் 3 மணியளவில் அலுவலக பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தேன். இந்த தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து பின் அவர்கள் அனுமதி அளித்ததன் பேரில், திடீர் சோதனை அரசு சாட்சிகள் முன்னிலையில் மேற்படி ஆவடி, நகர நில வரித்திட்டம், தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் 10.10.2019ந் தேதி மாலை 6.45 மணி முதல் இரவு 10.30 மணி வரை நடைபெற்றது. மேலும் இது தொடர்பாக சோதனை ஜாபிதா தயார் செய்யப்பட்டது. சோதனை ஜாபிதாவின் விவரம் பின்வருமாறு.

## சோதனை ஜாபிதா

| | | |
|---|---|---|
| சோதனை நடைபெறும் அலுவலகம் | | தனி வட்டாட்சியர் அலுவலகம்<br>நகர நில வரித்திட்டம்<br>பழைய நகராட்சி அலுவலகம்,<br>என்.எம்.சாலை,<br>ஆவடி, திருவள்ளூர் மாவட்டம். |
| சோதனை நடைபெறும் போது உடனிருந்த சாட்சிகள் சோதனை மேற்கொள்ளும் காவல் அலுவலர் | | (1) திரு.பி.ஜெகதீசன், ஆண் வயது 57<br>த/பெ.பெரியசாமி,<br>பட்டதாரி ஆசிரியர்,<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>உத்தம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம்.<br><br>(2) திரு.வெங்கடேசன், ஆண் வயது 25<br>த/பெ.அங்குசாமி,<br>இளநிலை உதவியாளர்,<br>உதவி ஆணையர் அலுவலகம்<br>வணிக வரித்துறை,<br>ஆவடி வரிவிதிப்பு வட்டம்<br>ஆவடி, சென்னை-600 054. |

| | |
|---|---|
| | திருமதி.எஸ்.ஜீடி அபிகேல்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுத்துறை<br>ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை<br>ஆலந்துார், சென்னை-16. |

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் உள்ள நகர நில வரித்திட்ட அலுவலகத்தில் பணியாற்றும் தனி வட்டாட்சியர் திரு.ஸ்ரீதரன், சர்வேயர்கள் மற்றும் இதர அலுவலர்கள் அந்த அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு உரிய அரசுப்பணியை செய்து தர கையூட்டு பெறுவதாக நம்பகமான தகவல் எனது அலுவலகத்திற்கு கிடைத்தது. மேற்படி தகவலை இன்றைய தேதியில் (10.10.2019) மாலை சுமார் 3 மணியளவில் அலுவலக பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டது. இந்த தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு எனது காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வழியாக தகவல் தெரிவித்து பின் அவர்கள் அனுமதி அளித்ததன் பேரில் திடீர் சோதனை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

மேலும் திடீர் சோதனைக்கு தலா ஒரு சாட்சியை அனுப்பி வைக்க வேண்டி உதவி ஆணையர், வணிக வரித்துறை, ஆவடி வரிவிதிப்பு வட்டம், ஆவடி மற்றும் ஆவடி மாவட்ட கல்வி அலுவலரின் அலுவலக கண்காணிப்பாளர் ஆகியோரிடம் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தன் பேரில் மேற்கண்ட இரண்டு சாட்சிகளும் இன்று 10.10.2019ந் தேதி மாலை சுமார் 6.30 மணியளவில் ஆவடி, என்.எம்.ரோடு, ஆவடி காய்கறி மார்க்கெட் எதிர்புறம் உள்ள நேரு சிலை அருகே வந்திருந்தனர். அங்கு காத்திருந்த நான் மேற்சொன்ன சாட்சிகளை அடையாளம் கண்டுகொண்டு அவர்களிடம் என்னையும் குழுவினரையும் அறிமுகம் செய்து தகவலை தெரிவித்து மேற்படி ஆவடியில் உள்ள நகர நில வரித்திட்ட அலுவலகத்தில் சோதனை செய்ய உள்ள விவரத்தை தெரிவித்தேன். மேற்படி இரண்டு சாட்சிகளும் சோதனையின் போது சாட்சியாக இருக்க ஒப்புக்கொண்டனர். மாலை சுமார் 6.45 மணியளவில் சோதனை தொடங்கப்பட்டது.

சோதனை நடைபெறவுள்ள ஆவடி நகர நில வரித்திட்ட அலுவலகம் ஆவடி என்.எம்.சாலையில் பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் இரண்டாவது தளத்தில் இயங்கி வருகிறது. மேற்படி அலுவலகம் வடக்கு தெற்காக கிழக்கு நோக்கி மெயின் வாசல் காணப்படுகிறது. மேற்படி அலுவலகத்தில் உள்ளே நுழைந்ததும், வடக்குப்புறத்தில் உள்ள அலுவலக அறையில் இரண்டு பெண்கள் இருக்கையில் அமர்ந்து பணியாற்றி கொண்டிருந்தனர். அந்த அறையின் தென்புறத்தில் உள்ள இருக்கையில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் முத்துலட்சுமி, க/பெ.சதிஷ் என்றும் தனது முகவரி எண்.46, பஜனை கோயில் தெரு, நடுவங்கரை, அண்ணாநகர் மேற்கு,

சென்னை-40 என்றும் தான் இந்த அலுவலகத்தில் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வருவதாகவும், விண்ணப்பம் அளிக்க வருவோரிடம் விண்ணப்பங்களை பெற்று வரிசைப்படுத்தி இந்த அலுவலகத்தில் பணியாற்றும் சர்வேயர்கள் (1) திரு.சந்திரசேகர் மற்றும் (2) திரு.மோகன் ஆகிய இருவரிடம் பார்வைக்கு வைப்பதாகவும் இதற்காக மாதம் ரூ.10,000/- ரொக்கமாக மேற்படி இரண்டு சர்வேயர்கள் தருவதாக தெரிவித்தார். பின்னர் திருமதி.முத்துலட்சுமி என்பவரிடம் உள்ள பணத்தை குறித்து கேட்க தான் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.40/- இருந்தது. மேற்படி பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேற்படி இதே அறையில் வடபுறத்தில் உள்ள இருக்கையில் தெற்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் பிரியா, க/பெ.செந்தில்குமார் என்றும் தனது முகவரி எண்.3, 2வது குறுக்கு தெரு, பட்டாபிராம், சென்னை-72 என்றும் தான் இந்த அலுவலகத்தில் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வருவதாகவும், விண்ணப்பம் அளிக்க வருவோரிடம் விண்ணப்பங்களை பெற்று வரிசைப்படுத்தி ஆர்.பி.டி எண் அளித்து இந்த அலுவலகத்தில் பணியாற்றும் மேற்சொன்ன இரண்டு சர்வேயர்கள் பார்வைக்கு வைப்பதாகவும், கணிணி தொடர்பான பணிகளையும் செய்து வருவதாகவும், கடந்த நான்கு மாத காலமாக இந்த அலுவலகத்தில் பணியாற்றி வருவதாகவும், இதற்காக மாதம் ரூ.10,000/- ரொக்கமாக மேற்படி இரண்டு சர்வேயர்கள் தருவதாக தெரிவித்தார். பின்னர் திருமதி.பிரியா என்பவரிடம் உள்ள பணத்தை குறித்து கேட்க தான் வைத்திருந்த மணிபர்ஸில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.950/- இருந்தது. (Rs.500X1 ; Rs.100X4 ; Rs.10X5) மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டதற்கு அவரது செலவிற்கு அவரது கணவர் கொடுத்ததாக தெரிவித்தார். மேற்படி விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அவரிடமே அந்த பணம் ரூ.950/- திருப்பி அளிக்கப்பட்டது. பின்னர் அவரது கைப்பையில் இருந்த இந்தியன் ஓவர்சிஸ் வங்கி, பட்டாபிராம் கிளை கணக்கு எண்.170601000019317 திருமதி.மீனாட்சி.வி என்ற பெயரில் உள்ள பாஸ்புத்தகத்தின் உள்ளே 10.10.2019 தேதியிட்ட ரூ.2 லட்சம் தொகை மேற்படி கணக்கில் வங்கியில் செலுத்தியதற்கான செலான் ஒன்றும் இருந்தது. மேற்படி தொகை குறித்து கேட்டதற்கு திருமதி.பிரியா அவர்கள் இன்று காலையில் ஐ.ஓ.பி வங்கி கிளையில் திருமதி.மீனாட்சி என்ற தனது அம்மாவின் பெயரில் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு சென்னை கோபாலபுரத்தில் இடம் விற்றதற்காக பெற்ற தொகையின் ஒரு பகுதியை வங்கியில் செலுத்தியதாக தெரிவித்தார். மேற்படி விளக்கம் ஏற்று கொள்ளக்கூடியதாக இல்லை. மேலும் இவ்வலுவலகத்தில் தனி வட்டாட்சியராக பணியாற்றும் திரு.ஸ்ரீதரன் அவர் பெறும் இலஞ்ச பணத்தை அவருக்கு நம்பகமான யாராவது ஒருவரது வங்கி கணக்கில் மறைத்து வைப்பதாக முன்தகவல் கிடைத்ததன் அடிப்படையில் அவ்வாறு இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் மேற்படி வங்கியின் பாஸ்புத்தகம் மற்றும் செலான் ஆகியவை மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி அலுவலகத்தின் தெற்கு பக்கத்தில் உள்ள தனி அறையில் தனி வட்டாட்சியர் திரு.ஸ்ரீதரன் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்தார். அவர் இருக்கைக்கு எதிரே மேற்கு நோக்கி பின்னர் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட ஆவடி தாலுகா, வெள்ளானூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.பி.மணிகண்டன் அமர்ந்திருந்தார். அவரிடம் என்னையும் சாட்சிகளையும் அறிமுகம் செய்து விவரத்தை தெரிவித்த போது மேற்படி ஸ்ரீதரன் பதற்றத்துடன் காணப்பட்டார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு தனது வலதுபுற முன் பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை அரசு சாட்சிகளிடம் கொடுத்து எண்ணி பார்த்தபோது பணம் ரூ.42,700/- இருந்தது. அவற்றின் விவரம் (Rs.500X65 ; Rs.2000X5 ; Rs.200X1). இந்த பணம் குறித்து திரு.ஸ்ரீதரனிடம் கேட்ட போது எந்த பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என்ற தகுந்த சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து அவரது வலதுபுற பேண்ட் பின் பாக்கெட்டிலிருந்து எடுத்து அவரது மணிபர்ஸை ஆஜர் செய்தார். அதில் பணம் ரூ.130/- இருந்தது (Rs.20X5 ; Rs.10X3) மேற்படி பணம் ரூ.130/- குறித்து திரு.ஸ்ரீதரனிடம் கேட்டதற்கு தனது சொந்தப்பணம் என்று கூறினார். மேற்படி பணம் ரூ.130/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

மேலும் மேற்படி திரு.ஸ்ரீதரனிடம் தொடர்ந்து வேறு ஏதாவது பணம் வைத்துள்ளீர்களா என்று கேட்டதற்கு தனது அலுவலகத்திற்கு எதிர்புறத்தில் என்.எம்.சாலைக்கு வடக்கு பக்கத்தில் உள்ள ஆவடி காவலர் குடியிருப்பின் உள்ளே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள TN12L2777 என்ற பதிவு எண் கொண்ட Swift Dzire காரில் பின்சீட்டில் தனது கறுப்பு நிற லேப்டாப் பையில் கோப்புகளுக்கு நடுவே பணம் வைத்திருப்பதாகவும் தன்னை அழைத்து சென்றால் அதை எடுத்து தருவதாக தெரிவித்தார். அவரை தொடர்ந்து அவருக்கு எதிரே அமர்ந்திருந்த பின்னர் பெயர் கேட்டு விவரம் தெரிந்து கொண்ட கிராம நிர்வாக அலுவலர் திரு.பி.மணிகண்டன் என்பவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு அவரது பேண்ட் வலதுபுற முன்பக்க பாக்கெட்டிலிருந்து தான் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.3,500/- (Rs.500X7) இருந்தது. மேற்படி பணம் குறித்து கேட்டதற்கு இன்றைய தேதியில் வசூலான யு.எல்.டி தொடர்பான பணம் என்று தெரிவித்ததை தொடர்ந்து மேற்படி பணம் ரூ.3,500/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

பின்னர் மேற்படி திரு.ஸ்ரீதரன் எங்களை அழைத்துக்கொண்டு அவர் அலுவலகத்திற்கு எதிரே அமைந்துள்ள ஆவடி காவலர் குடியிருப்பு வளாகத்திற்கு உள்ளே வடகிழக்கு மூலையில் மறைவாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரது மேற்சொன்ன TN12L2777 என்ற பதிவு எண் கொண்ட Swift Dzire காரின் பின்சீட்டில் தனது கறுப்பு நிற safari என்ற பெயர் பொறித்த ரெக்சின் லேப்டாப் பையில் உள்ளே நடுப்பகுதியில்

இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை சாட்சிகளிடம் கொடுத்து விளக்கு வெளிச்சத்தில் எண்ணி பார்த்தபோது பணம் மொத்தம் ரூ.46,360/- இருந்தது. அதன் விவரம் (Rs.500X89 ; Rs.200X2 ; Rs.100X12 ; Rs.50X1 ; Rs.20X4 ; Rs.10X13) மேற்படி பணம் குறித்து திரு.ஸ்ரீதரனிடம் கேட்டதற்கு எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.46,360/- லஞ்ச பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின்பேரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது லேப்டாப் பையின் மற்றொரு அறையில் Apple iPhone 7Series புதிய செல்போன் ஒன்றும் அதற்கான பெட்டியுடனும் மற்றும் மற்றொரு GIONEE பழைய செல்போன் ஒன்றும் காணப்பட்டது. இதை தவிர மேற்படி ஸ்ரீதரனிடம் மூன்றாவதாக SAMSUNG SM-T285 என்ற மாடல் கொண்ட Tablet ஒன்றும் நான்காவதாக SAMSUNG J7 என்ற மாடல் கொண்ட செல்போன் ஒன்றும் இருந்தது. மேற்படி நான்கு எலக்டிரானிக் சாதனங்கள் குறித்து திரு.ஸ்ரீதரனிடம் கேட்டதற்கு தனக்கு அன்பளிப்பாக நண்பர்கள் கொடுத்ததாக தெரிவித்தார். மேற்படி நான்கு எலக்டிரானிக் சாதனங்கள் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. தேவைப்படும்போது விசாரணைக்கு அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இந்த சோதனையின் முடிவில் பணம் ரூ.89,060/- கைப்பற்றப்பட்டது. இந்த சோதனை இன்று இரவு 10.30 மணியளவில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலக பணிகளுக்கு இடையூறோ, அரசு உடைமைகளுக்கு சேதமோ ஏற்படாத வண்ணம் நடத்தி முடிக்கப்பட்டது. தொடர்ந்து எனது அலுவலகம் வந்து தகவலை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து உரிய அனுமதி பெற்றேன்.

(ஒப்பம்/-XXX) 10/10/19 பெ.ஜெகதீசன், பட்டதாரி ஆசிரியர், அ.மே.நி.பள்ளி, குத்தம்பாக்கம், திருவள்ளூர் - Dt 8939145210.

(ஒப்பம்/-XXX) 10/10/19 அ.வெங்கடேஷ், இளநிலை உதவியாளர், வணிகவரித்துறை, ஆவடி வரிவிதிப்பு வட்டம், சென்னை-54.

(ஒப்பம்/-XXX) 10/10/19 (S.JUDY ABIGAIL, INSPECTOR OF POLICE, SIC, DVAC) பெ.ஜெகதீசன், பட்டதாரி ஆசிரியர், அ.மே.நி.பள்ளி, குத்தம்பாக்கம், திருவள்ளூர் - Dt 8939145210.

(ஒப்பம்/-XXX) 10/10/2019 (V.SRIDHARAN), Spl. Tahsildar, Town Survey and Settlement Office, Avadi.

(ஒப்பம்/-XXX) 10/10/2019 (S.PRIYA), Temporary Staff.

(ஒப்பம்/-XXX) 10/10/2019 (S.MUTHULAKSHMI), Temporary Stafff.

(ஒப்பம்/-XXX) 10/10/2019 B.மணிகண்டன், கிராம நிர்வாக அலுவலர், 13, வெள்ளானூர், ஆவடி வட்டம்.

தொடர்ந்து எனது அலுவலகம் வந்து தகவலை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து உரிய அனுமதி பெற்றேன். பின்னர் சோதனை ஜாபிதாவில் குறிப்பிட்டுள்ள குற்றங்களுக்காக எதிரி ஸ்ரீதரன், தனி வட்டாட்சியர், நகர நில வரிதிட்டம், பழைய நகராட்சி அலுவலகம், என்.எம்.சாலை, ஆவடி, சென்னை என்பவர் மீது ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.20/2019 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 என்ற வழக்கு 11.10.2010-ம் தேதி 1500 மணிக்கு பதிவு செய்தேன். அசல் முதல் தகவல் அறிக்கை, முதன்மை குற்றவியல் நீதிமன்ற நடுவர் மற்றும் தனி நீதிபதி, திருவள்ளுர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

INSPECTOR OF POLICE,
Special Investigation Cell,
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.